நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு
வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். சிசி. **216 / 2021**

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அம்மாசி | : | தொழில் | மத்திய சிறை பணியாளர் (ஓய்வு) |
| கிராமம் | கடுவெளி | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 60 /2023 |

( எதிரிகள் ஆஜர்)

<u>**நாள் : 07.06.2023**</u>

**முதல் விசாரணை:**

**1)** நான் கடுவெளியில் குடியிருந்து மத்திய சிறையில் பணி புரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 20.08.2018 ஆம் தேதியன்று இரவு 09.00 மணி அளவில் நான் வேலையை முடித்துவிட்டு உங்கள் ஊருக்கு சென்று கொண்டிருந்தபோது சுப்ரமணியன் என்பவர் வீட்டுக்கு அருகே ஆஜர் எதிரிகள் புண்ட மவனே, தேவடியா மவனே என்று தகாத வார்த்தையினால் திட்டினார்கள், 2 ஆம் எதிரி மகேஸ்வரன் என்பவர் உருட்டு கட்டையால் இடது காதிலும், நெற்றியிலும் அடித்தார். 1 ஆம் எதிரி கத்தி எடுத்துகொண்டு வந்து என்னை விடக்கூடாது கொலை செய்து விடவேண்டும் என்று துரத்தினார்கள், நான் பயந்து சுப்ரமணியன் என்பவரது வீட்டிற்குள் நுழைந்துவிட்டேன், அவரது வீட்டை அடித்து உடைத்துவிட்டார்கள். நான் அங்கிருந்து தப்பித்து ஒருவருடைய இரு சக்கர வாகனத்தில் சென்று மருவூர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது நான் அளித்ததுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு )